**<u>தமிழ்நாடு அரசு</u>**

**<u>பொருளாதார குற்றப்பிரிவு, மதுரை</u>**

**<u>ஏல அறிவிப்பு</u>**

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்யப்பட்ட Crl.O.P. (MD) No. 15498 of 2024 (batch cases)-ல் 09.10.2025 தேதியில் பிறப்பித்துள்ள உத்தரவின்படி, நியோமேக்ஸ் ப்ராப்பர்டீஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் அதன் துணை நிறுவனங்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட அசையும் சொத்துக்கள், சட்டப்பிரிவு 3 தமிழ்நாடு முதலீட்டாளர்கள் நல பாதுகாப்பு சட்டத்தின் (TNPID Act) கீழ் அரசால் இடைமுடக்கம் செய்யப்பட்டுள்ள அசையும் சொத்துக்களில் 21 வாகனங்கள் ஏற்கனவே 31.10.2025ம் தேதியன்று ஏலம் விடப்பட்டது. அதில் 19 வாகனங்களுக்கு ஏலம் முடிவு செய்யப்பட்டது. மேலும் வாகனப்பதிவு எண். TN-63-BR-5000 Hyundai Alcazar என்ற நான்கு சக்கர வாகனத்தின் அடிப்படை விலை (Upset price) ரூ.14,58,000/- என்று குறிப்பிடப்பட்டிருந்தது. மேற்கண்ட வாகனத்தின் அடிப்படை விலை (Upset price)யை காட்டிலும் ஏலம் கோரியவர்கள் குறைவாக ஏலத்தொகைக்கு விண்ணப்பித்திருந்தனர். இந்த வாகனம் நல்ல நிலையில் இருப்பதால் அடிப்படை விலை (Upset price)யைவிட கூடுதலாக குறிப்பிட்டு ஏலம் கோருபவருக்குதான் விற்பனை செய்யவேண்டும் என மாண்புமிகு நீதிமன்ற 03.11.2025, உத்தரவுப்படி இந்த வாகனம் மறு ஏலம் விடப்படுவதற்காக மதுரை, பார்க் டவுன், தபால் தந்தி நகர், எண் 4/425-யு, சங்கரபாண்டியன் நகரில் உள்ள மதுரை பொருளாதார குற்றப் பிரிவு அலுவலக வளாகத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. வாகனம் 12.11.2025 தேதி மறுஏலத்தில் விடப்படும். ஏலம் கோருபவர்கள் பிணை வைப்புத்தொகையாக ரூ.5,000/- (ரூபாய் ஐந்தாயிரம்) கேட்பு வரைவோலை (Demand Draft)-யை தகுதி பெற்ற அதிகாரி / காவல் கண்காணிப்பாளர், பொருளாதார குற்றப் பிரிவு, தென்மண்டலம், சென்னை - 82 என்ற பதவின் பெயரில் பெற்று செலுத்தவேண்டும். இந்த வாகனத்திற்கு ஏற்கனவே ஏலத்தில் கலந்துகொண்டவர்கள் மீண்டும் கலந்துகொள்ளலாம் அவர்கள் வரைவோலை (Demand Draft) எடுக்க தேவையில்லை விலைப்புள்ளியை மட்டும் குறிப்பிட்டு தகுதி பெற்ற அதிகாரி / காவல் கண்காணிப்பாளர், பொருளாதார குற்றப் பிரிவு, தென்மண்டலம், எண். 2, காவலர் பயிற்சி கல்லூரி வளாகம், அசோக்நகர், சென்னை - 600083 என்ற முகவரிக்கு 11.11.2025-ந்தேதி பிற்பகல் 5.00 மணிக்குள் மூடிய உறையில் (Sealed cover) சமர்ப்பிக்க வேண்டும். மூடிய உறையில் மேற்கண்ட வாகனத்திற்கு குறிப்பிட்டுள்ள அடிப்படை விலையை விட கூடுதலாக தொகை குறிப்பிட்டு தபால் உறையின்மேல் வாகனத்திற்காக என்று குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.

ஒம்/-Dr. K. சரவணக்குமார்

தகுதி பெற்ற அதிகாரி/காவல் கண்காணிப்பாளர்,

பொருளாதார குற்றப் பிரிவு,

தென்மண்டலம், சென்னை.